மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

முற்பகல் 10-25

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணாது உழைத்து, உறங்காது விழித்து, இந்த நாட்டை ஆண்ட மகராசியே, எங்கள் அன்னை மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியையும், இயக்கத்தையும் சிறப்பாக வழி நடத்தும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வரையும், மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதல்வரையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி, காவேரி நதி நீர் உரிமையை மீட்டெடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், காவேரி டெல்டா பாசன விவசாயிகள் சார்பாகவும், எனது முசிறி தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிடாரம் ஊராட்சி, சூரம்பட்டியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் 20 குழந்தைகள் பயின்று வருகின்றனர். அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்து, மோசமான நிலையில் உள்ளது. ஆகவே, அந்த மையத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தருவதாக உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

தரம் உயர்த்துதல்

***11891—திரு. பி.என்.பி. இன்பசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2018 ஜூன் 1

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பெண்ணாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி, தங்கத் தாரகை தமிழக மக்களின் மனங்களில் நீங்காத இடம் பெற்ற அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியை வழி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஜல்லிக்கட்டு நாயகன் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றப் பேரவையில் அறிவித்த 108 அறிவிப்புகளில் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு 9 அறிவிப்புகள் கொடுத்திருந்தார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் கொடுத்த அறிவிப்புகளின்படி இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் C.T. scan *இயந்திரம் வழங்கப்பட்டு, அந்த ஸ்கேன் நல்ல முறையில் இயங்குவதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் 608 படுக்கை வசதிகள் உள்ளன. தினசரி 2,500 வெளி நோயாளிகள் வந்து

2018 ஜூன் 1]

செல்கின்றார்கள். 60 மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். இந்த மருத்துவமனை ஈரோடு மக்களின் பயன்பாட்டிற்கு மிகப் பொருத்தமான மருத்துவமனையாக இருக்கின்றது. ஈரோடு மட்டுமல்லாமல், பவானி, மொடக்குறிச்சி, ஈரோடு கிழக்கு, மேற்கு தொகுதிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் தென்னரசு, (குறுக்கீடு) நீங்கள் மூத்த உறுப்பினர், கேள்வி கேட்பதை விட்டுவிட்டு, எழுதி வைத்ததை படித்துக் கொண்டிருக்கிறீர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். ஈரோடு கிழக்கு, மேற்கு தொகுதிகள் குமாரபாளையம், திருச்செங்கோடு மக்களின் வசதிக்காக இந்த மருத்துவமனை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த மருத்துவமனையை, அரசு பல்நோக்கு சிகிச்சை மருத்துவமனையாக,* Super Speciality *மருத்துவமனையாக அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மிகச் சிறப்பாக செயல்பட்டு வரக்கூடிய மருத்துவமனையாக இருக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. தென்னரசு அவர்கள் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை நேரிலும், சட்டமன்றத்திலும் வலியுறுத்தி வருகின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக உரிய கருத்துரு பெறப்பட்டு, அரசினுடைய சாதகமான பரிசீலனையில் இருக்கின்றது என்ற நல்ல தகவலை இந்தச் சட்டமன்றத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நிகழ்வு இல்லாமல், JICA *திட்டத்தின்கீழும் ஈரோடு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கூடுதலாக நிதியொதுக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அங்கு வந்து ஆய்வு செய்தபோது, இதே கருத்தை வலியுறுத்தினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின்*

வேண்டுகோளுக்கிணங்க, ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை குறித்து மாண்புமிகு அம்மாவினுடைய அரசின் சார்பில் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சரும் ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரை செய்திருக்கிறார். ஆக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் நல்ல அறிவிப்பை வெளியிடுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.*

திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று நல்லாட்சி புரிந்து மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே 24 மணி நேரத்தில், 20 மணி நேரம் உழைத்து நல்லாட்சி நடத்தி வரும் மக்கள் தலைவர் எங்கள் மண்ணின் மைந்தர் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. ஏழையெளிய மக்கள், குறிப்பாக கர்ப்பிணி தாய்மார்கள் பிரசவத்திற்காக அதிகமாக அங்கே வருகிறார்கள். ஆகவே, பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை*

எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட வடகரை கீழ்பிடாகை பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அதில் எந்த வசதிகளும் இல்லாத காரணத்தால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். 25,000 மக்கள் வசிக்கக்கூடிய பகுதியிலுள்ள அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி, அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், வாவாநகரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் பயன்பெறுவார்கள். கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட இக்பால் நகரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று நான் தொடர்ந்து இரண்டு வருட காலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களிடமும் வலியுறுத்தி வருகிறேன். நான் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவிலே தமிழ்நாட்டில் மட்டும்தான் தொடர்ந்து புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஏழு ஆண்டுகளில் மட்டும் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். இந்த ஆண்டில் மட்டும் 30 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக, எல்லா இடங்களிலிருந்தும் கோரிக்கைகள் வரப்பெறுகின்றன. குறிப்பாக,* rural health-*கிராமப்புற சுகாதார சேவையை*

உறுதிப்படுத்திய ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம், நம்முடைய அருமையான கட்டமைப்பு. 8 கிலோ மீட்டருக்கு ஒரு இடத்தில், இன்னும் சொல்லப் போனால் 8 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ள இடத்திலேயே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக, பெருகி வரக்கூடிய மக்கள் தொகையால் நகராட்சிகள், பேரூராட்சிப் பகுதிகள் மற்றும் மக்கள் நெருக்கம் காணப்படுகின்ற பகுதிகளிலிருந்து இதுபோன்ற கோரிக்கைகள் வரப்பெறுவது நிச்சயமாக நியாயமான விஷயம்தான். வருங்காலங்களில் நோயாளிகளினுடைய எண்ணிக்கை, மக்கள் தொகை மற்றும் அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி நா. மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

ஊத்தங்கரை தொகுதி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி இல்லை. தலைமை மருத்துவக் கல்லூரி வழங்குகின்றபட்சத்தில் தலைமை மருத்துவமனையை ஊத்தங்கரை தொகுதிக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட தலைமை மருத்துவமனைதான் என்ற அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட தலைமை மருத்துவமனை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஊத்தங்கரை*

2018 ஜூன் 1]

தொகுதிக்கு போதிய வசதிகள் செய்து தர மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கோரிக்கையை கேட்டுப் பெற்று, துறைரீதியாக ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு, பணிகள் சாதகமாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.*

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காவே நான்" என்று வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அவர்களுடைய எண்ணங்களையும், சொல்களையும் செயலாக்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எனக்கு இங்கே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட மொடக்குறிச்சி ஒன்றியத்திற்கு 2 தாலுக்காகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, தற்போது அவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-35

மொடக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தினை தாலுகாக மருத்துவமனையாக இந்த நிதியாண்டியிலேயே தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், அந்தப் பகுதிக்குட்பட்ட அவல்பூந்துறை பேரூராட்சிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை 20 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தியத் திருநாட்டிலே தமிழகத்தை சுகாதாரத் துறையிலே முன்னிறுத்தி நடத்திக் கொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்கள் நல்ல செய்தியை வழங்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அரசினுடைய கொள்கைப்படி, வருவாய்த் துறை சார்பிலே எங்கெல்லாம் புதிய தாலுகாக்கள் உருவாக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதுபோல, மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பிலே அங்கிருக்கிற மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, புதிய மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு,* x-ray, scan *போன்ற வசதிகள் எல்லாம் செய்யப்படுகின்றன.*

வருவாய்த் துறை சார்பிலே புதிய தாலுகா உருவாக்கப்படும்போது அங்கு தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். மற்றபடி, health sub-centre-*ஐ ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையமாக உயர்த்தக்கூடிய கொள்கை அரசின் சார்பிலே இல்லை. தாங்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதிக்கு இன்ன பிற வசதிகள் அல்லது கூடுதலாக என்னென்ன வசதிகள் தேவையோ அவை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இணையாக சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கைக்கு ஏற்ப செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் நம் அனைவருடைய இதயங்களிலும் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழும் மனித தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட சீலியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கடந்த ஆண்டு இதே அவையிலே நான் ஒரு கேள்வியைக் கேட்டபொழுது, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை ஊராட்சிக்கு ஒன்று என்ற வகையிலே தரம் உயர்த்த வேண்டும் என்ற எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கையை நிறைவேற்றுகின்ற வகையிலே இந்த ஆண்டு அனைத்து ஊராட்சிகளிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட சுகாதார*

2018 ஜூன் 1]

நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். மேலும், வருகிற காலங்களிலே மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகள் மற்றும் மிகப்பெரிய அளவிலே இருக்கின்ற ஊராட்சிகளை சிறப்பினமாகக் கருதி 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவோம் என்ற ஒரு நல்ல செய்தியையும் அன்றைக்குச் சொன்னார்கள். எங்களது ஊராட்சியிலே ஏறத்தாழ 30-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் சீலியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்கள். மலைப் பகுதியிலிருந்து அந்த சுகாதார நிலையத்திற்கு ஏறத்தாழ 40 கி.மீ. தூரத்திலிருந்து வரவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. அப்படி வந்தாலும்கூட உள்நோயாளிகளாக சிகிச்சை பெற வேண்டும் என்றால், அங்கே போதுமான படுக்கை வசதி இல்லை எனவே, சிறப்பினமாகக் கருதி மலைவாழ் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே அமைச்சர் அவர்கள் சீலியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட கேள்வி, பதில் இரண்டையும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, 385 ஒன்றியங்களிலும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசின் சார்பிலே கடந்த நிதி ஆண்டோடு ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவில் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு விட்டது. இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் தேவையின் அடிப்படையில், மலைவாழ் பகுதிக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்க ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அந்த ஆய்வின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த மருத்துவமனைக்கும் முன்னுரிமை வழங்கப்படும். சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதுபோல 40 கி.மீ. தூரம் மலைப் பகுதிகளில் இருந்து வந்து சிகிச்சை பெறக்கூடிய நிலை நிச்சயமாக தமிழகத்தில்*

இல்லை. ஏனென்று சொன்னால், 8 கி.மீ.-க்கு ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. எங்கேயெல்லாம் மலைப்பகுதி இருக்கிறதோ, remote village இருக்கிறதோ, அங்கேயெல்லாம் நடமாடும் மருத்துவக் குழு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் பள்ளிக்கூட மாணவர்கள் அங்கன்வாடி மையத்திலே screening-பரிசோதனை செய்வதற்கு-RBSK என சொல்லக்கூடிய பள்ளிச் சிறார்களுக்கான சிறப்புத் திட்டம் இருக்கிறது. ஆகவே, மருத்துவமனையை நாடி மக்கள் வரக்கூடிய நிலையை மாற்றி, மக்களை நாடி மருத்துவச் சேவை என்ற உன்னதமான நிலையை இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசுதான் அடைந்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 770 நடமாடும் மருத்துவக் குழுக்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

107—

வணிக வரி அலுவலகம்

***13233—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டத்தில் வணிக வரி அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டத்தில் சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வணிகர்களுடைய எண்ணிக்கையும், வணிக வரி வருவாயும் மிகக் குறைவாகவே உள்ளதால், இம்மாவட்டத்திற்கென வணிக